கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியிலான இந்த அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடமும் எடுத்துக்கூறி, எதிர்வரக்கூடிய காலத்தில் அதுபற்றி பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன் அவர்கள்.*

திரு. ப. சத்திய நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 196, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

196—

நேரடி கொள்முதல் நிலையம்

***11910—திரு. வெ. கணேசன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திட்டக்குடி தொகுதி, பெண்ணாடம் பேரூராட்சிப் பகுதியில் புதிய நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நடப்பு நெல் கொள்முதல் பருவத்தில் திட்டக்குடி தொகுதி, பெண்ணாடம் பேரூராட்சிப் பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு இன்று வரை 1,197 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இந்த நெல்

கொள்முதல் நிலையம் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.

திரு. வெ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், அண்ணன் தளபதி அவர்களை வணங்குகிறேன். எனது திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியின் மையப் பகுதியில் பெண்ணாடம் பேரூராட்சி அமைந்துள்ளது. இந்தப் பேரூராட்சியைச் சுற்றி சுமார் 20–க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இங்கு விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்த நெல்லை நியாயமான விலையில் சரியான எடையளவுடன் விற்பனை செய்ய முடியாமல், தவித்து வருகின்றனர். இதனால் விவசாயிகள் வேறு வழியின்றி தனியாரிடம் விற்பனை செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். ஆகவே, பெண்ணாடம் பேரூராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள 20 கிராம மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, நெல் கொள்முதல் நிலையம் ஒன்றினை பெண்ணாடம் பேரூராட்சிப் பகுதியில் துவக்கிட வேண்டுமென மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதிலில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று சொன்னேன். தற்போது 1,197 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் அந்த நெல் கொள்முதல் நிலையம் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் நினைவுபடுத்துகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவசாயிகள் தனியாரிடம் நெல்லை விற்பனை செய்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். எனவே, அவருடைய பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படவேண்டுமெனக் கோரிக்கை வைத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், நெல் சாகுபடி செய்கிறவர்கள் நெல்லை விற்பதற்குரிய

2018 ஜூன் 14]

அத்தனை நடவடிக்கைகளும் சிறப்பாகத் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன என்பதனை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிய வேண்டுமென இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

அதுமட்டுமல்லாமல், இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் எல்லாம் விவசாயிகள் நெல்லை வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கு விற்பனை செய்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் திறக்கப்படுகின்றன. விவசாயிகளுக்கு மார்க்கெட்டில் அதிக விலை கிடைத்தால், அவர்கள் வியாபாரிகளிடமும் விற்பனை செய்து கொள்ளலாம். ஆனால், வியாபாரிகள், விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு வாங்கிவிடக் கூடாது என்பதற்காகத்தான் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நடப்பு பருவத்தில் கடலூர் மாவட்டத்தில் மட்டும் 118 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. இன்று வரை 63,843 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் கொண்டுவரும் நெல்லை கொள்முதல் செய்ய ஏதுவாக, தற்போதும் 40 கொள்முதல் நிலையங்கள் உங்கள் பகுதியில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, திட்டக்குடி தாலுகாவில், பெண்ணாடம் உட்பட, 14 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 12,006 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. பெண்ணாடம், கொட்டாரம், கீழ்க்கல்பூண்டி, பரமக்குடிகாடு, தாழநல்லூர், அருகேரி மற்றும் வெங்கரும்பு ஆகிய ஊர்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் இன்றும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.*

திரு. வெ. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியில் சுமார் 30,000 ஏக்கர் பாசன வசதி பெறக்கூடிய வெல்லிங்டன் ஏரி அமைந்துள்ளது. பெண்ணாடம் பேரூராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள இறையூர், பொன்னேரி, கூடலூர், கொடிக்கலம்,*

நெய்வாசல், திருவட்டடத்துறை, கொத்தட்டை, எரப்பாவூர், மேல் நெம்மேலி, கீழ்நெம்மேலி, ஆதமங்கலம், சாத்தனத்தம், மேலூர், மருதத்தூர் போன்ற கிராமங்களில் இதுவரை நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படவில்லை. ஆகவே, வெல்லிங்டன் ஏரியின் மூலம் பாசன வசதி பெற்று, இந்தப் பகுதிகளில் நெல் உற்பத்தி அதிகமான அளவு செய்யப்படுகின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்வதென்னவென்றால், திட்டக்குடி தொகுதியில் இப்பொழுதுதான் குறுவை அறுவடை நடைபெற்று வருகிறது. எனவே, ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற நெல் கொள்முதல் நிலையங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெண்ணாடத்தில் திறக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். பெண்ணாடத்தில் இல்லவே இல்லை. பெண்ணாடம் அருகில் மாளிகைக்கோட்டையில்தான் திறக்கப்பட்டிருக்கிறது. நான் அந்தத் தொகுதியில்தான் இருக்கிறேன். தொகுதியைச் சுற்றி வந்து கொண்டிருக்கிறேன். நான் நன்றாகத் தெரிந்து அறிந்துதான் சொல்கின்றேன். பெண்ணாடத்தில் இல்லை. ஆகவே இந்தப் பகுதி விவசாயிகளின் சார்பாக, நான் குறிப்பிட்டுள்ள அந்தக் கிராமங்களுடைய விவசாயிகளின் பிரதிநிதியாக இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, பெண்ணாடத்தில், அதைச் சுற்றியிருக்கின்ற 20 கிராம விவசாயிகள் பயனடைகின்ற வகையில், ஒரு நெல் கொள்முதல் நிலையத்தை அவசியம் திறக்க வேண்டும் என்பதுதான். இதனை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்தில் சொன்ன பதிலில், நடப்பு கொள்முதல் பருவத்தை பொறுத்தவரைக்கும், கடலூர் மாவட்டத்தைக் குறித்து சொன்னேன். டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் 1,447 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 12 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. எந்தவிதமான

2018 ஜூன் 14]

பிரச்சினையும் இல்லாமல், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்மூலம் விவசாயிகளிடமிருந்து நெல் தொடர்ந்து கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த திட்டக்குடி பகுதியில், இருக்கின்ற பெண்ணாடம் பேரூராட்சியின் ஒரு பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் இயங்கிக் கொண்டிருக்கிறது. தேவையென்றால், நெல் வரத்தைக் கருத்திற்கொண்டு, அவர்கள் சொல்கிற ஊர்களில் நெல் வரத்து இருக்குமேயானால், உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவினைப் பெற்று, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உத்தரவிட்டு, உடனடியாகத் திறக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 197, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

197—

பின்னலாடை விற்பனை மையம்

***6390—திரு. க.நா. விஜயகுமார்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வடக்கு தொகுதியில் பின்னலாடை விற்பனை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வடக்கு தொகுதியில் பின்னலாடை விற்பனை மையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.